Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.723/2022

**Depositions of PW- 5**

| Name | திரு.வேதமாணிக்கம் | Occupation | மங்கலம் வருவாய் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | செல்லச்சாமி | Calling | |
| Village | பாட்டக்குளம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of February 2026.

05.02.2026

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மங்கலம் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 2018 ம் வருடம் வாழைக்குளம் கூடுதல் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது மம்சாபுரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் என்னிடம் ராக்காட்சியம்மன் கோவில் ஓடை அரசுக்கு பாத்தியப்பட்டதா அல்லது தனியாருக்கு பாத்தியப்பட்டதா என்று கேட்டு கடிதம் கொடுத்தார். 20.02.2018 அன்று நானும் கிராம உதவியாளரும் ராக்காட்சியம்மன் கோவில் ஓடையை நேரில் பார்வையிட்டு மற்றும் கிராம கணக்குகளை சரிபார்த்து ராக்காட்சியம்மன் கோவில் ஓடையானது அரசு புறம்போக்கு ஓடை என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சான்று மற்றும் அடங்கல் நான் வழங்கியதுதான். **ராக்காட்சியம்மன் கோவில் ஓடையானது அரசு புறம்போக்கு ஓடை என்று நான் வழங்கிய சான்று அசாஆ.7 ஆகவும் மற்றும் அடங்கல் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

வாழைக்குளம் கிராமம் வேறு பகுதியிலும் ராக்காட்சியம்மன் கோவிலானது வேறு பகுதியிலும் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. வாழைக்குளம் கிராமத்தில் ராக்காட்சியம்மன் கோவிலானது அமைந்துள்ளது. ராக்காட்சியம்மன் கோவில் அருகேயுள்ள ஓடையின் இருபுறங்களிலும் விவசாய நிலங்கள் உள்ளது என்றாலும் அதில் தென்னை, மா, எலுமிச்சை போன்றவை பயிரிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். சம்பவத்தன்று ஓடையில் மணல் அள்ளும்பொழுது நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மணல் அள்ளிய இடம் குறிப்பாக எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள். போலீசார் விசாரணையில் நான் மேற்படி சம்பவயிடத்தை பார்வையிட்டேன் என்று கூறியுள்ளேனா என்றால் சம்பவயிடத்தை பார்வையிட்டதாக கூறினேன்.

போலீசார் என்னிடம் கொடுத்ததாக மேற்படி நான் கூறிய வேண்டுகோள் கடிதத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுகோள் கடிதமானது எங்களது அலுவலக கோப்பில் உள்ளது. மேற்படி நான் கூறியவாறு போலீசார் எனக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்காததால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ராக்காட்சியம்மன் கோவில் ஓடையின் நீளம் மற்றும் அளவு போன்றவை என்னால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் கிராமத்திற்கென்று தனியாக நிலஅளவையர் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.